3. அவையுரிமைக் கேள்விகள்.

(அ) பேரவைத் தலைமையால் அகற்றப்பட ஆணையிடப்பட்ட பகுதிகளை ''மறவன் மடல்'' வெளியிட்டது குறித்து, அச்செய்தித்தாள் ஆசிரியர் வருத்தம் தெரிவித்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நமது சட்டமன்ற நிகழ்ச்சியிலிருந்து நீக்கவேண்டுமென்று பேரவைத் தலைவர் நீக்கிய பகுதி 'மறவன் மடல்' பத்திரிகையில் வெளிவந்ததைக் குறிப்பிட்டு, பேரவையில் எழுப்பப்பட்ட உரிமைப் பிரச்னையை யொட்டி, அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் தவறுக்கு வருத்தம் தெரிவித்து ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

We regret very much for the publication of the news item at page 4 of our Daily dated 6th March 1969 (City) which we later larnt that it has been expunged from the proceedings of the Legislative Assembly by the Deputy Speaker. As our reporter immediately rushed to the phone, he did not notice the order of Deputy Speaker and we felt much for it.

We are enclosing herewith a copy of our Daily in which we published our regret for the publication of the abovesaid news. We assure you that hereafter wards we will take much care while publishing the proceedings of the Madras Legislative Assembly. என்று வருத்தம் தெரிவித்திருக்கிற காரணத்தால் மேற்கொண்டு எவ்வித நடவடிக்கையும் தேவையில்லையென்று முடிவு எடுக்கிறேன்.

(ஆ) 'நவசக்தி' நாளிதழ் பேரவை நிகழ்ச்சிகளைத் திரித்து வெளியிட்டதுகுறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. மு. சின்னசாமி, அவர்கள் நவசக்தி பத்திரிகை நம்முடைய பேரவை நிகழ்ச்சிகளைத் திரித்து வெளியிட்டதற்காக ஓர் உரிமைப் பிரச்னையைக் கொண்டுவந்தார்கள். நான் அதை மறுநாள் எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னேன். இதற்கு இடையில் அந்தப் பத்திரிகை ஒரு திருத்தம் வெளியிட்டிருக்கிறதே ஒழிய அதற்கு வருத்தம் தெரிவித்து எழுதவில்லை. அப்படி வருத்தம் தெரிவித்து எழுதும் என்று எதிர்பார்த்து, இதை நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன்.

(இ) நவமணி நாளிதழ் பேரவை நிகழ்ச்சிகளைத் திரித்து வெளியிட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. கொளத்தூர் கோதண்டம் அவர்கள், நவமணிப் பத்திரிகை பேரவை நிகழ்ச்சியைத் திரித்து வெளியிட்டதற்காக அப்பத்திரிகைமீது ஓர் உரிமைப் பிரச்னை கொண்டுவந்தார்கள். அந்தப் பத்திரிகை பிறகு திருத்தத்தை வெளியிட்டு, தவறான செய்தியை வெளியிட்டமைக்காக வருந்துகிறோம் என்று வருத்தம் தெரிவித்திருக்கிறது. ஆகவே, இந்த நிகழ்ச்சியை இதோடு விட்டுவிடுகிறேன். ஆனாலும், நிகழ்ச்சிகளை முதலிலே வெளியிட்டுவிட்டு, பிறகு திருத்தம் வெளியிட்டு, வருத்தம் தெரிவிக்கிற முறையைச் செய்தித் தாள்கள் மேற்கொள்ள வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(ஈ) நிதியமைச்சருடைய பேச்சை எதிர்க்கட்சித் தலைவர் திரித்துக் கூறியதுகுறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் ஓர் உரிமைப் பிரச்னையை எழுப்பியிருக்கிறார்கள்.